30th October 1958]

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கத்தினுல் ஏற்படுத்தப் படும் ஹாஸ்டல்கள் ஹைஸ்கூல் உள்ள இடங்களிலதான் இருக்கின்றன. இந்த விஷயத்தைப் பரிசிலனை செய்யச் சொல்லுகிறேன்.

Harijan Welfare School

* 730-D Q.—SRI P. U. SHANMUGAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன நல இலாகா புதிய பாடசாலைகள் இனி திறப்பதில்லை என்று முடிவெடுத்திருப்பது உண்மையா ?

(ஆ) காரணம் யாது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) With a view to avoid segregation of Harijan boys and girls in separate schools and to bring together both Harijan and non-Harijan boys in common school, the Government decided not to open separate Harijan Welfare schools.

SRI P. U. SHANMUGAM : புதிய பாடசாலை திறக்கப்படா விட்டாலும் இருக்கிற பாடசாலை மூடப்படாமல் இருக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : இருக்கிற பாடசாலைகளைகூட இன்றைக்கு ஒரு சில விசேஷ காரணங்களினுல நிறுத்துமபடி நேர்ந்தாலும் நேரும்.

Inclusion of the term "Harijan," in the list of Scheduled Castes.

* 730-E Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) " ஹரிஜன் " என்ற பெயர் சட்டரீதியாக கவர்மெண்டால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) " ஹரிஜன் " என்ற பெயரை ஷெடியூல் வகுப்பினர்களுடைய ஜாபிதாவில் சேர்ப்பதுபற்றி அரசாங்கம் பரிசிலனை செய்து வருகிறதா ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) No, Sir.

SRI A. GOVINDASAMY : அந்த லிஸ்டில் ஹரிஜன் என்று எழுதினுல் ஒப்புக்கொள்வதில்லை. ஷெட்யூல் வகுப்பு இன்ன பிரிவு என்று எழுதவேண்டியிருக்கிறது. ஹரிஜனன் என்று காந்திஜீ வைத்த பெயர் எழுதினுலே போதும் என்று சர்க்கார் உத்திரவிடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்லும் விஷயம் அரசாங்கத்திற்கு தெரியும். இருந்தாலும் அரசியல் அமைப்பில் இப்படி அமைந்துவிட்டதனுல் இதை மாற்றுவதற்கு முடியவில்லை.

SRI P. G. MANICKAM : ஹரிஜனன் என்ற பெயரில் தாழ்த்தப் பட்டவர்கள் அத்தனை பேரும் வந்துவிடுகிறுர்கள். ஷெட்யூல் காஸ்ட் என்பது ஆங்கிலப் பெயர். ஆகவே ஹரிஜனன் என்று போட்டால் போதும் என்று மத்திய சர்க்காரைக் கலந்துகொண்டு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நான் முன்பே சொன்னேன். இந்தமாதிரி மாற்றம் செய்யவேண்டுமென்றுல் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும். ஆகவே இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் ஒன்றும் செய்வதிற்கில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள் கிறேன்.